## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின்அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனம் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.5.2 பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) **நியம இலக்கம் - 02**<br>செயற்பாட்டு நடவடிக்கைகள், நிதியிடல் நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான தேறிய காசுப்பாய்ச்சல்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இற்கு முரணாக முறையே ரூபா 165,000 ரூபா 6,800,844 மற்றும் ரூபா 11,963,481 ஆல் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | நியமங்களிற்கு இணங்கவும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட வழுக்களை திருத்துமுகமாகவும் இனிவரும் ஆண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டது. | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிப்பதற்கு நிறுவனமானது ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) **நியம இலக்கம் - 03**<br>2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 3,021,272 தொகையான வழுக்கள் திருத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 47, 48 மற்றும் 50 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அத்தகைய சரிபார்த்தல்கள் சரிபார்க்கப்பட்டு முறையாக ஒப்பிட்டு எண்களில் மீள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் குறிப்பிட்டவாறு உரிய கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க எதிர்காலத்தில் கணக்கீட்டு பதிவுகளை மேற்கொள்வதற்கு குறிப்பிட்டிருந்தேன். | நியமத்தின் பிரகாரம் தவறுகளை திருத்துவதிலும் தேவையான வெளிப்படுத்தல் களை மேற்கொள்வதிலும் நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) **நியம இலக்கம் 07**<br>(i) நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 7,132,880 கிரயமான சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.இருந்த எனினும், எனினும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுக்களை மீளத்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு ஆய்வில் இனங்காணப்பட்ட பயன்படுத்தப்படாத உபகரணம் 2020 யூன் 30 இல் அகற்றப்பட்டிருந்தது. மேலும், பயன்படுத்தக் கூடிய உபகரணத்தினை 2020 இல் மீள்மதிப்பிடுவதற்கும் கணக்கிடுவதற்கும் கணக்குப் பிரிவிற்கு அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட்டது. | நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யக்கூடிய தொகை தீர்மானிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்தானது அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியதுடன் நிறுவனமானதும் அதனுடைய சொத்துக்களை கொள்வனவு செய்யப்படும் ஆண்டிலும் மற்றும் விற்பனை செய்யப்படும் ஆண்டிலும் முழுவதுமாக பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்ற அடிப்படையில் பெறுமானத்தேய்வை மேற்கொண்டது. அதனால் ரூபா 374,104 தொகையான பெறுமானத்தேய்வு மீதான செலவினம் நடைமுறை ஆண்டில் ரூபா 6,692,704 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 15 சொத்துக்கள் நிதிசார் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பெறுமானத்தேய்வுகள் 2019 இல் கொள்வனவு செய்யப்பட்ட திகதியின் அடிப்படையில் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் கணக்குகளை தயாரிப்பதிலுள்ள பெறுமானத்தேய்வானது கொள்வனவு செய்யும் ஆண்டில் முழுவதுமாக பெறுமானத்தேய்விடப்படும் கொள்கைக்கிணங்க நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் இலக்கம் 02 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நியமத்தில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல் களின் பிரகாரம் சொத்தமானது அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க நிறுவனத்தின் பெறுமானத்தேய்வு கொள்கை மாற்றப்பட வேண்டும். |
| (iii) | நடைமுறையில், நிறுவனமானது ஜாவத்தையிலுள்ள தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான 0.1840 ஹெக்டயர் பரப்புள்ள காணியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் இயங்குவதுடன் அதற்குரிய மீளமைப்பு வேலைக்காக 2019 திசெம்பர் 31 வரையில் ரூபா 21,140,552 தொகையை செலவழித்திருந்தது. 2020 ஆகஸ்ட் 05 இலும் சொத்தின் உரிமை நிறுவகத்திற்கு மாற்றப்படாதிருந்தபோதிலும் நிறுவகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்களின் உரிமை இன்மையால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி 87(9) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தொழில் திணைக்களத்தால் மாதாந்த வாடகை அடிப்படை இல்லாமல் ஆரம்பத்திலிருந்து இந்த கட்டிடம் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருந்தது. பராமரிப்பு வேலை, முறையான சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் கட்டிடத்திற்கு மேலதிக வேலைகள் நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் வருமானம் உழைக்கப்பட்டும் பொது மக்களுக்கு சேவை வழங்கப்பட்டும் வருகின்றது. இதனை நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நான் குறிப்பிட்டிருந்தேன். | நியமத்தின் வழிகாட்டல்களின் பிரகாரம், நிறுவனம் அமைந்துள்ள காணியின் சட்ட உரிமை இல்லாமையினை நிதிக்கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய கணக்குகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில் அமைச்சிடமிருந்து பெறவேண்டியவைகளாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,623,444 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், அத்திகதியிலுள்ளவாறான தொழில் அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 4,074,197 தொகையாக சொல்லப்பட்ட பொறுப்பு காட்டப்பட்டிருந்தது. அதனால் ரூபா 3,549,247 தொகையான மீதியின் பெறுகை ஐயத்திற்கிடமாக இருந்தது. | நிறுவனமானது ரூபா 7,623,444 இற்காக பட்டியல்களை சமர்ப்பித்திருந்த போதிலும், அமைச்சின் கணக்குகள் பிரிவால் ரூபா 4,074,197 தொகையானது சேமிக்கப்பட்ட ஏற்பாடுகள் மீது சுகாதார அமைச்சால் தேசிய தொழிற்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்திற்கு செலுத்த வேண்டிய பட்டியல்களின் பொறுப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. | அமைச்சின் கணக்குப் பிரிவானது மீளாய்வாண்டின் இறுதியளவில் அமைச்சிடமிருந்து பெறவேண்டிய பணம் தொடர்பாக கவனம் கொண்டிருந்தது எனவும் இது அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது எனவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்தின் வரவு மீதியானது ரூபா 9,265,761 தொகையானதுடன் கடன்பட்டோர்களின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் 90 நாட்களிற்கு மேலாக உள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 3,348,710 ஆக காணப்பட்டது. இருந்தபோதிலும், சொல்லப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோர்களின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 90 நாட்களிற்கு மேலாகவுள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 3,348,710 ஆக உள்ளதை நான் ஏற்றுக் கொள்வதுடன் ரூபா 803,525 கொண்ட கடன்பட்டோர் தவிர்ந்த அனைத்து கடன்பட்டோர்களிடமிருந்தும் பணத்தினை அறவிடுவதற்கு 2019 ஆகஸ்ட் 31 இலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கடன்பட்டோர்கள் மீது காலரீதியான மீளாய்வு மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன் அறவிடப்படாதுள்ள மீதிகள் தொடர்பாக துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் I(ஆ) மற்றும் (II) ஆம் பிரிவு | i. | நிறுவனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட மேலதிக படிகள் பொது திறைசேரியின் அனுமதி மற்றும் சிபாரிசுடன் அதிகரிக்கப்பட வேண்டியதுடன் மேற்கூறப்பட்ட அனுமதியில்லாமல் இயக்குனர் சபையின் அனுமதியுடன் மாத்திரம் ரூபா 369,894 தொகை மேற்கொள்ளப் பட்டிருந்தது. | இயக்குனர் சபையின் பிரகாரம் மற்றும் தேறிய வருமானத்தை கருத்திற் கொண்ட பின்னர் அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் செய்யப்பட்ட மேலதிக வேலைகளிற்காக மேலதிக படி வழங்கப்பட்டது மேற்கூறப்பட்ட படிகளிற்கான அனுமதி ஊழியர் அமைச்சினூடாக திணைக்களத்திடமிருந்து நிறுவனத்தால் தேடப்பட்டதுடன் இந்த அனுமதியானது வருகின்ற சிலநாட்களிற்குள் அமைச்சின் அவதானிப்புக்களை சமர்ப்பித்ததன் பின்னர் பெறப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அனைத்து மேலதிக படிகளும் ஏற்கனவே நிறுத்தப்பட்டிருந்ததென அறிவிக்கின்றேன். | படிகளின் கொடுப்பனவிற்கான முறையான செய்முறை முறைப்படுத்தப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். |
| | ii. | நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பாடநெறிகளில் பங்குபற்றிய வள நபர்களிற்கான கொடுப்பனவை மேற்கொள்கையில் வளநபர்களிற்கான படிகள் ரூபா 1,022,750 தொகை மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட | பாடநெறிகளிற்காக விரிவுரையாளர்களிற்கான கொடுப்பனவானது ஏனைய நிறுவனங்களிற்கான கொடுப்பனவை விட குறைவாக இருந்தமையால் தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை (மருத்துவ உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள்) போன்ற தொழிற்துறை வல்லுனர்களை ஈடுபடுத்தும் நிலையை | மேலதிக படிகளின் கொடுப்பனவிற்கான முறையான செய்முறை முறைப்படுத்தப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எல்லையை விஞ்சி செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்படுத்தியது. இது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் உரிய விடயங்களை கருத்திற் கொண்ட பின்னர் சொல்லப்பட்ட திணைக்களத்தினால் தொழில் அமைச்சால் அதன் மீதான அவதானிப்புக்கள் வேண்டப்பட்டது என நான் உறுதிப்படுத்துகின்றேன். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 28,130,642 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 21,506,251 தொகையாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 6,624,391 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு வருமானம் ரூபா 12,994,110 ஆல் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிற்கு எடுக்கப்பட்ட இயக்குனர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், தனியார் நிறுவனமானது இரத்த மாதிரியை பரீட்சிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டது. பெறுகை வழிகாட்டிகளின் 3.6.1 ஆம் பிரிவிலுள்ள மூல ஒப்பந்தத்தை வழங்கும் திகதிகளிலிருந்து 06 மாங்களிற்கு மேற்படாது வழங்கப்பட்ட மீண்டெழும் கட்டளைகள் அனுமதிக்கப்படக்கூடும் என்ற போதிலும், இரத்த பரீட்சிப்பானது 2014 இலிருந்து 2019 வரை தொடர்ச்சியாக 05 வருடங்களிற்காக சொல்லப்பட்ட நிறுவனங்களினூடாக மாத்திரம் செயற்படுத்தப்பட்டது. இதே நேரம் இயக்குனர் சபையின் | சொல்லப்பட்ட நிறுவனத்தின் சேவையானது 2014 இலிருந்து பெறப்பட்டது என நான் இணங்குகின்றேன்.. எனினும், ஏனைய நிறுவனங்களால் வழங்கப்பட்ட விலைகளுடன் ஒப்பிடும் போது நிறுவனமானது மிகக்குறைந்த விலையை அறவிடுகின்றது. அதற்கு மேலதிகமாக சில கடந்த வருடங்களிற்கு மேலதிகமாக ரூபா 300 ஆல் விலையானது அதிகரிக்கப்பட்டிருந்தது. | பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டிகளுடன் இனங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அங்கீகாரமானது 3 வகையான பரீட்சிப்புக்களிற்காக கட்டணங்களை ரூபா 300 ஆல் அதிகரிப்பதற்கு வழங்கப்பட்டது. | அதற்கு மேலதிகமாக, நிறுவனத்தின் நிபுணர் இரத்தப் பரீட்சிப்பை செயற்படுத்துவதற்கு நிறுவனத்துடன் உரிய தொழிற்சாலைக்கு வருகை தருவதுடன் அதற்காக எந்தவித மேலதிக கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை மேற்கூறப்பட்ட காரணங்களிற்காக சொல்லப்பட்ட நிறுவனத்திடமிருந்தான சேவைகள் தொடர்ச்சியாக பெறப்பட்டது. | |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொதுச் சேவையிலுள்ள மனித வளங்களின் அபிவிருத்தியின் கீழுள்ள 2018 சனவரி 24 இன் 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு நிறுவனமானது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தின் மனித வள அபிவிருத்திக்குரிய பல்வேறு துறைகளிற்கு தேவையான பயிற்சியினை இனங்கண்டதன் பின்னர் பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு அபிவிருத்தி திட்டத்தில் உள்ள விடயங்களை உள்ளடக்குவதற்கு குறிப்பிட்டிருந்தேன். | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனமானது மனிதவள அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது என நிறுவனம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை அதிகாரச்சட்டத்தின் 9(11) ஆம் பிரிவின் பிரகாரம், நிறுவனத்தின் வினைத்திறனான நிர்வாகத்திற்கு அத்தியாவசியமாகவுள்ளோர் நிறுவனத்தின் இயக்குனர்களாக நியமிக்கப்பட வேண்டும். பிரிவு 06 இன் பிரகாரம் சபையானது நிறுவனத்தின் இயக்குனரை செயலாளராக நியமிக்கும். இருந்தபோதிலும், நிறுவனத்தின் உயர் தரத்திலுள்ள 07 பதவிகள் வெற்றிடங்களாகவுள்ளது. | தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை நிறுவகத்தின் இயக்குனர்கள் கணக்காய்வில் குறிப்பிடப்பட்ட கணக்கிற்கு அனுமதிக்கப் பட்டிருந்ததுடன் நிறுவகத்தின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் சொல்லப்பட்ட பதவிகளிற்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் வினைத் திறனிற்கும் செயற் திறனிற்கும் தேவையான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். |